# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 597/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 13    P.W.10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | N. கோபால் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.03.2026.

**முதல் விசாரணை**

1. நான்  தற்போது உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.11.2025 ம் தேதி நான் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் பணியில் சேர்ந்த போது எனக்கு முன்பாக உதவி ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி நிலைய குற்ற எண் 711/2024 வழக்கில்  புலன் விசாரணை செய்து கைவிரல் ரேகை நிபுணரின் அறிக்கையை பெற்று நீதிமன்ற காவலில் இருந்த  எதிரி அபிராஜ் என்பவரை கைது செய்ய சம்பிரதாய கைது  மனு தாக்கல் செய்து பணி மாறுதல் ஆன நிலையில்  தொடர் புலன் விசாரணைக்காக  எனது பார்வைக்கு வைக்கப்பட்டது.  நான் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு உதவி ஆய்வாளர்விசாரித்த சாட்சிகளை விசாரித்த போது புதிய சங்கதிகள் எதுவும் கூறாததால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.
2. பின்னர் எதிரி அபிராஜ் என்பவரை பிடி வாரண்ட் மூலமாக கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்த போது அவர் ஏறகனவே கைது ஆன வழக்கில் ஜாமினில் வெளியே சென்று

விடடதால் நடவடிக்கை எடுக்க இயலவில்லை. அதனால் எதிரியும் வழக்கு சொத்தையும் தேடி புலன் வைத்த போது எனக்கு கிடைத்த ரகசய தகவலின் படி 01.12.2025 ம் தேதி கஞ்சிராம்பள்ளி டிஎம்சி காவல் நிலையம் கார் பார்க்கிங் அருகில் நடந்து வந்த எதிரியை தகவலாளி அடையாளம் காட்ட பிடித்து விசாரித்த போது அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க ஒப்புகொண்டார் . பின்னர் காவல் நிலையம் அழைத்து வந்து சாட்சிகள் பாலகிருஷ்ணன் மற்றும் ரங்கசாமி ஆகியோர் முன்னிலையில் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தை பதிவு செய்த போது வாதியின் வீட்டில் இருந்து ரூ 10000/- ஐ திருடியதாக ஒப்பு கொண்டதையும், அந்த பணத்தை ஜாமின் எடுத்த வக்கீலுக்கும், சாப்பாடு செலவிற்கும், நண்பர்களுடன் ஊர் சுற்றுவதற்கும் செலவு செய்துவிட்டார். அவரது இரு சக்கர வாகனத்தை திருநெல்வேலி போலிசார் வேறு ஒரு வழக்கில் பறிமுதல் செய்து விட்டதாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து சாட்சி கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அசா.ஆ .10 என குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் எதிரியை திரேக பரிசோதனைக்கு பின் நீதிமன்ற காவலுக்கு ஒப்புவித்தேன். பின்னர் வாதி மல்லிகா என்பவரை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் விரல் ரேகை நிபுணர் முத்துகுமார் உதவி ஆய்வாளர் என்பவரை விசாரித்தும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பெண் காவலர் தனலட்சுமி என்பவரை விசாரித்தும் வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. முதல் தகவல் அறிக்கையில் எதிரியின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் 10000 பணத்தின் டிமானிேனசன் மற்றும் பணத்தின் எணகள் குறித்து புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். அரசு தரப்பு வழக்கு படி எதிரியை நேரில பார்த்த சாட்சிகள் யாரும் இல்லை என்றால் சரிதான். கைரேகை துப்பு வைத்து தான் கேரளா சென்றிர்கள் என்றால் இல்லை திருநெல்வேலி வழககில் ஒப்புதல் வாக்குமூலத்தின் படியும் கைரேகை படியும் எதிரியை சென்று பார்த்தோம். திருநெல்வேலியில் எந்த வழக்கில் யார் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றால் அந்த விவரம் தெரியாது. அந்த வழக்கில் தொடர்புடைய எதிரியின்

புகைப்படம் கிடைத்ததா என்றால் பார்மல் அரெஸ்ட்டிற்கு காவல் உதவி ஆய்வாளர் போன போது அவரை நேரில் பார்த்துள்ளார். பார்மல் அரெஸ்ட்டிற்கு போன போது எந்த காவல் உதவி ஆய்வாளர் என்றால் ராமேஸ்வரன் காவல் உதவி ஆய்வாளர். எந்த வழக்கிற்காக பார்மல் அரெஸ்ட்டிற்காக போனார்கள் என்றால் இந்த வழக்கிற்காக போனார்கள். இந்த வழக்கில் சம்பந்தப்பட்டு எதிரி திருநெல்வேலியில் இருக்கிறார் என்று காவல் உதவி ஆய்வாளருக்கு தெரியும் என்றால் பார்மல் அரெஸ்ட்டிற்காக போனதாக ரெக்கார்டில் உள்ளது. உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம் நான் அதன் பின்னிட்டு தான் பொறுப்பேற்று கொண்டேன்.

2. எதிரியை கேராளாவில் பார்க்க போன போது காவல் உதவி ஆய்வாளர் ராமேஸ்வரன் உடன் வந்தாரா என்றால் இல்லை. தகவலாளி என்று சொல்லியுள்ள நிலையில் அவர் தமிழ்நாடா அல்லது எந்த நாடு என்றால் கேரளா மாநிலம். எந்த தேதியில் எத்தனை மணிக்கு வைத்து எதிரி கைது செய்யப்பட்டார் என்றால் 01.12.2025 ம் தேதி காலை 11.00 மணிக்கு கேரளா கஞ்சிராப்பள்ளியில் வைத்து கைது செய்யப்பட்டது. பார்த்த போது அவரை விசாரித்திர்களா அல்லது உடனே கைது செய்திர்களா என்றால் விசாரித்து கைது செய்தோம். கைது செய்த இடத்தின் அருகில் காவல் நிலையம் உள்ளதா என்றால் ஆமாம். அங்குள்ள அரசு அலுவலர்கள் விஏஓ முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் வாங்க முயற்சி செய்யவில்லை என்றாலுட்ம தனிநபர் சாட்சிகள் முன்னிலையில் வாங்க முயற்சி செய்யவில்லை என்றாலும் சரிதான்.

3. எதிரியை எந்த தேதியில் உடுமலைப்பேட்டை காவல்நிலையம் அழைத்து வந்திர்கள் என்றால் அன்றைய தினம் இரவே அழைத்து வந்தோம். அதன் பின்னிட்டு உடுமலைப்பேட்டை காவல் நிலையம் அருகில் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம்ள சாட்சிகள் புகார்தாரர் மல்லிகாவிற்கு வேண்டபப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. மல்லிகா வேண்டப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலப்படி குற்ற நிகழ்ச்சி நடத்த பைக்கில் KL 36 L 1197 என்ற வாகனத்தில் வந்ததாக சொல்லியுள்ள நிலையில் அந்த வாகனத்தை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அ ந்த வாகனம் வேறு வழக்கில் கைப்பற்றப்பட்டதால் இந்த வழக்கில் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த வாகனம் திருநெல்வேலி வழக்கில் சம்பந்தப்பட்டது என்பதை காண்பிக்க ஆவணம் வழக்கு கோப்பில்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. விட்டின் பூட்டை உடைக்க ராடு பயன்படுத்தியதாக சொல்லியுள்ள நிலையில் அந்த ராடை வழக்கில் கைப்பற்றவில்லை என்றால் தேடி பார்த்தோம் கிடைக்கவில்லை. எங்கு எங்கு தேடி பார்த்திர்கள் என்றால் தாந்தோணியிலிருந்து வீட்டை விட்டு வெளியே வரும் வழியில் தேடி பார்த்தோம், கிடைக்கவில்லை. எதிரி மலையாளி என்றாலும் அவருக்கு தமிழ் தெரியாது என்றாலும் அவருக்கு தமிழ் தெரியும். எதிரிக்கு மலையாளம் மட்டும் தான் தெரியும் என்றாலும் அவரிடம் தமிழில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தது தவறு என்றாலும் சரியல்ல. களவாடிய பணம் செலவு செய்ததாக சொல்லியுள்ள நிலையில் எந்த வக்கீலுக்கு கொடுத்தார் என்று விசாரித்து தெரிந்து கொண்டிர்களா என்றால் இல்லை.
5. எதிரி சம்பவ இடத்திற்கு அழைத்து சென்று எப்படி செய்திர்கள் என்று ஒத்திகை காட்ட சொல்லி பார்த்திர்களா என்றால் ஒத்திகை பார்க்கவில்லை இடத்தை மட்டும் காண்பிக்க சொன்னோம். எந்த தேதியில் எத்தனை மணிக்கு எதிரியை வீட்டை காண்பிக்க சொன்னிர்கள் என்றால் 2 ம் தேதி காலை 7.00 மணிக்கு. கைரேகை பதிவு எடுத்த ஒரிஜினல் சேம்பிள் ஸ்லைடை நீதிமன்றத்திற்கு அனுப்பினிர்களா என்றால் அனுப்பப்பட்டுள்ளது, வழக்கு கோப்பில் உள்ளது. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வ ழக்கை எப்படியாவது முடிக்க வேண்டும் என்ற காரணத்திற்காக காவல் உதவி ஆய்வாளர் ராமேஸ்வரன் என்பவர் கொடுத்த தகவலின் படி வேறு வழக்கில் இருந்து கைரேகை பதிவை பயன்படுத்தி இந்த எதிரியை தவறுதலாக கைது செய்த அனைத்து புலன் விசாரணைகளும் தவறுதலாக செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தவறான புலன் விசாரணையில் இந்த எதிரி மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.